காணவில்லை; சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரும் ஆட்டுக்குட்டியானவருமே அதற்கு ஆலயம். நகரத்திற்கு வெளிச்சங்கொடுக்கச் சூரியனும், சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை; தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசிப்பித்தது, ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு. இரட்சிக்கப்படுகிற ஜனங்கள் அதின் வெளிச்சத்திலே நடப்பார்கள். பூமியின் ராஜாக்கள் தங்கள் மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டு வருவார்கள். அங்கே இராக்காலம் இல்லாதபடியால், அதின் வாசல்கள் பகலில் அடைக்கப்படுவதேயில்லை. உலகத்தாருடைய மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டுவருவார்கள். தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை; ஆட்டுக்குட்டியான வரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள். பின்பு, பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத் திலிருந்து புறப்பட்டுவருகிறதை எனக்குக் காண்பித் தான். நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டு விதமான கனிகளைத் தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைவதற்கு ஏதுவானவைகள். இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டி யானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும். அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவருடைய சமுகத்தைத் தரிசிப்பார்கள்; அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும். அங்கே இராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள்மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள் (வெளி. 21:10–22:5).

இயேசுவைப் பின்பற்றும் ஒவ்வொருவரும் விசுவாசத்தில் இவைகளை எதிர்பார்த்துக் காத்திருக்க முடியும். பரலோகத்துக்குச் செல்லும் முதல் ஒருசில நாட்களில் ''ஓஹோ, இதைத்தான் யோவான் விளக்க முயன்றாரோ?'' என்று ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ளுவோம் என்பதில் ஐயமில்லை.



## 28

# தேவனுடைய நித்திய திட்டம்

தேவன் ஏன் நம்மைச் சிருஷ்டித்தார்? துவக்கத்திலிருந்தே அவர் ஏதேனும் இலக்கைக் கருத்தில் கொண்டிருந்தாரா? எல்லோரும் தமக்கு எதிராகக் கலகம்செய்வார்கள் என்பதை அவர் அறிந்திருக்கவில்லையா? நமது மீறுதலின் பின்விளைவுகளையும், அன்றிலிருந்து மானிடர்கள் அனுபவித்துவரும் பாடுகளையும் துக்கத்தையும் அவர் முன்னரே அறிந்திருக்கவில்யைா? அப்படியானால் அவர் ஏன் எல்லோரையும் முதலில் சிருஷ்டித்தார்?

வேதாகமம் நமக்காக இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்கிறது. தேவன் ஆதாமையும் ஏவாளையம் சிருஷ்டிப்பதற்கு முன்பாகவே, அவர்களும் மற்றவர்களும் பாவம் செய்வார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார். அற்புதமான காரியம் என்னவென்றால் அவர் ஏற்கெனவே இயேசுவின் மூலம் மனுக்குலத்தை மீட்பதற்கான திட்டத்தை உருவாக்கியிருந்தார். தேவனுடைய சிருஷ்டிப்புக்கு முன்னரேயுள்ள திட்டத்தைப் பற்றிப் பவுல் இவ்வாறு எழுதுகிறார்:

> அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சியாமல், *தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும்*, நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார் (2 தீமோ. 1:9 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

தேவனுடைய கிருபையானது கிறிஸ்துவுக்குள் நமக்கு *ஆதிகாலமுதல்* அருளப்பட்டிருக்கிறது. இது இயேசுவின் பலி மரணத்தைத் தேவன் ஆதியிலேயே திட்டமிட்டிருந்தார் என்பதைத் தெளிவாக்குகிறது.

இதைப்போலவே பவுல் எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்:

> தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த *அநாதி தீர்மானத்தின் படியே...* (எபே. 3:9 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

சிலுவையில் இயேசுவின் மரணம் தேவன் எதிர்பார்க்காத ஒன்றுக்குப் பொருந்தும்படி அவசரமாகத் தீட்டப்பட்ட ஒரு திட்டம் அல்ல.

தேவன் ஆதிகாலமுதல் நமக்கு அருளிய கிருபையில் ஒரு நித்திய நோக்கத்தைக் கொண்டிருப்பது மட்டுமின்றி, யார் தமது கிருபையை ஏற்றுக்கொள்ளுவதைத் தெரிந்துகொள்ளுவார்கள் என்பதை அவர் நித்திய காலமாக முன்னறிந்திருக்கிறார். அவர்களின் பெயரை அவர் ஒரு புத்தகத்திலும் எழுதி வைத்திருத்திருக்கிறார்:

> உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி (இயேசு) யினுடைய *ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட் டிராத பூமியின் குடிகள்* யாவரும் அதை வணங்கு வார்கள் (வெளி. 13:8 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

ஆதாமின் வீழ்ச்சி தேவனை வியப்பில் ஆழ்த்தவில்லை. உங்களுடைய வீழ்ச்சியும் என்னுடைய வீழ்ச்சியும்கூட அவரை வியப்படையச் செய்யவில்லை. நாம் பாவம் செய்வோம் என்பதை தேவன் அறிந்திருந்தது மட்டுமின்றி, யார் மனந்திரும்பி ஆண்டவராகிய இயேசுவை ஏற்றுக்கொள்ளுவார்கள் என்பதையும் அவர் அறிந்திருந்தார்.

## அடுத்த கேள்வி

சிலர் இயேசுவை விசுவாசிப்பார்கள், சிலர் அவரைப் புறக்கணிப் பார்கள் என்பதைத் தேவன் முன்னரே அறிந்திருப்பாரானால், அவரைப் புறக்கணிப்பார்கள் என்று தாம் அறிந்தவர்களை அவர் ஏன் சிருஷ்டித்தார்? மனந்திரும்பி இயேசுவை விசுவாசிப்பார்கள் என்று தாம் அறிந்த மக்களை மட்டுமே அவர் ஏன் சிருஷ்டித்திருக்கக் கூடாது?

இந்தக் கேள்விக்கான பதிலைப் புரிந்துகொள்ளுவது சற்றே கடினம் என்றாலும், அது இயலாதது அல்ல.

முதலாவதாக, தேவன் நம்மைச் சுயாதீன சித்தத்தோடு படைத்திருக்கிறார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அதாவது, நாம் தேவனைச் சேவிப்போமா அல்லது இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ளும் சிலாக்கியத்தை நாம் எல்லோருமே பெற்றிருக்கிறோம். கீழ்ப்படிவதா அல்லது கீழ்ப்படியாமலிருப்பதா, மனந்திரும்புவதா அலலது இல்லையா போன்ற தீர்மானங்கள் அவரால் முன்னரே தீர்மானிக்கப்படவில்லை. இதை நாமே தெரிந்துகொள்ளுகிறோம்.

இது இப்படியிருக்கிறபடியால், நம்மில் ஒவ்வொருவரும சோதிக்கப்பட வேண்டும். நாம் என்ன செய்வோம் என்பதை தேவன்





முன்னறிந்திருக்கிறார் என்பது நிச்சயமாகும். *ஆனால் அவர் அதை முன்னறிய வேண்டுமானால், ஒரு கட்டத்தில் நாம் ஒன்றைச் செய்ய வேண்டியிருக்கிறது.*

எடுத்துக்காட்டாகச் சொல்லுவோனால் தேவன் ஒவ்வொரு கால்பந்து பந்துப் போட்டியின் முடிவையும் முன்னரே அறிந்திருக்கிறார். ஆனால் தேவன் இதை முன்னறிந்திருக்க வேண்டுமானால் காலபந்துப் போட்டிகள் நடக்க வேண்டும். ஒருபோதும் விளையாடப்படாத போட்டிகளின் முடிவுகளை அவர் முன்னறிந்திருக்க முடியாது. ஏனென்றால் அப்படிப்பட்ட போட்டிகளுக்கு முடிவுகள் கிடையாது.

நல்லொழுக்கரீதியாக விரும்பியதைத் தெரிந்துகொள்ளும் சுயாதீனத்தோடு படைக்கப்பட்டிருக்கும் மக்கள் தங்கள் சுயாதீனத்தைப் பயன்படுத்தி இரண்டில் ஒன்றைத் தெரிந்துகொண்டால் மட்டுமே தேவனால் அதை முன்னறிந்திருக்க முடியும். அவர்கள் எதைத் தெரிந்து கொள்ளுவார்கள் என்பது சோதிக்கப்பட வேண்டும். எனவேதான் மனந்திரும்பி, ஆண்டவராகிய இயேசுவை ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று தாம் முன்னறிந்த மக்களை மட்டுமே இயேசுவானவர் சிருஷ்டிக்க வில்லை.

## மற்றொரு கேள்வி

‘‘கீழ்ப்படியும் மக்களை மட்டுமே தேவன் விரும்புகிறார் என்றால், பிறகு ஏன் அவர் சுயாதீன சித்தத்தோடு நம்மைப் படைத்தார்? அவர் ஏன் எப்போதுமே கீழ்ப்படியும் இயந்திர மனிதர்களைப் படைத்திருக்கக் கூடாது?’’ என்ற கேள்வியும் எழுகிறது.

தேவன் பிதாவானவராக இருக்கிறார் என்பதே இதற்குரிய பதிலாகும். அவர் நம்மோடு பிதாவுக்கும் குமாரனுக்கும் இடையேயுள்ள உறவைப் பெற விரும்புகிறார். இயந்திர மனிதர்களோடு தகப்பன் மகன் உறவை வைத்துக்கொள்ள முடியாது. தங்கள் சொந்த சுயசித்தத்தினால் தம்மிடம் அன்புகாட்டும்படி தெரிந்துகொண்டவர்களைக் கொண்ட நித்திய குடும்பத்தைப் பெறவே தேவன் விரும்புகிறார். வேதவசனங் களின்படி இதுவே அவருடைய முன்குறிக்கப்பட்ட தீர்மானமாகும்:

> தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்துமூலமாய்த் தமக்குச் *சுவிகார புத்திர ராகும்படி* முன்குறித்திருக்கிறார் (எபே. 1:6 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

இயந்திர மனிதர்களிடமிருந்து தேவனால் எப்படிப்பட்ட சந்தோஷத்தைப் பெற முடியும் என்பதைக் குறித்து அறிய விரும்பு வீர்களானால், உங்களுக்கு முன்பாக ஒரு பொம்மையை நிறுத்தி, அது உங்களிடம் ‘‘நான் உன்னிடம் அன்புகூருகிறேன்’’ என்று சொல்லும்படி செய்யுங்கள். உங்களுடைய இருதயத்தில் அன்பின்

உணர்வை உஙகளால் பெற முடியாது. அந்தப் பொம்மையானது நீங்கள் அது எதைச் சொல்லும்படி செய்திருக்கிறீர்களோ அதை மட்டுமே சொல்லுகிறது. அது உண்மையில் உங்கள்மீது அன்புகூரவில்லை.

சுயாதீன சித்தத்தைக் கொண்டுள்ள ஒருவர் அன்புகாட்டுவதைத் தெரிந்துகொள்ளுவதுதான் அன்பை விசேஷித்த ஒன்றாக ஆக்குகிறது. பொம்மைகளாலும், இயந்திரமனிதர்களாலும் எதையும் தீர்மானிக்க முடியாது என்கிறபடியால், அவைகள் அன்பைக் குறித்து எதையும் அறிந்திருக்கவில்லை.

தங்கள் சொந்த இருதயங்களில் தம்மிடம் அன்புகாட்டி, தம்மைச் சேவிப்பதைத் தெரிந்துகொள்ளும் பிள்ளைகளின் குடும்பத்தைத் தேவன் பெற விரும்பியதினால்தான் அவர் அவர்களை நல்லொழுக்க ரீதியாகச் சுயாதீன சித்தத்தோடு படைக்க வேண்டியிருந்தது. நல்லொழுக்க ரீதியாகச் சுயாதீன சித்தத்தைக்கொண்ட சிலர் அவரிடம் அன்புகாட்டிச் சேவிப்பதைத் *தெரிந்துகொள்ளாமல்* இருக்கக் கூடும் என்கிறபடியால், அவர் துணிந்தேதான் இந்தத் தீர்மானத்தை எடுக்க வேண்டியிருந்தது. இப்படி நல்லொழுக்கரீதியாகச் சுயாதீன சித்தமுள்ளவர்கள், தமது சிருஷ்டியின் மூலமாகத் தம்மை வெளிப்படுத்தி, எல்லாச் சிருஷ்டிகளையும் தம்மிடம் இழுத்துக்கொள்ளும் தேவனை, அவர்களுடைய மனச்சாட்சி மற்றும் சுவிசேஷத்தின் அழைப்பின் மூலமாகத் தம்மை வெளிப்படுத்தும் தேவனை வாழ்நாள் முழுவதும் எதிர்த்து நிற்பதைத் தெரிந்துகொள்ளுவார்களானால், அவர்கள் தேவ கோபாக்கினைக்குத் தாங்கள் பாத்திரர் என்பதை நிரூபித்திருக்கிறார்கள், எனவே நீதியான தண்டனையை எதிர்நோக்கியே ஆக வேண்டும்.

நரகத்திலுள்ள எந்த நபரும் தேவனை நோக்கிக் குற்றம் சாட்டும்படி விரலை உயர்த்த முடியாது. ஏனென்றால் ஒவ்வொருவரும் தங்கள் பாவத்தின் தண்டனையிலிருந்து தப்புவதற்கான வழியை அவர் ஏற்படுத்தியிருக்கிறார். எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்றே தேவன் வாஞ்சிக்கிறார் [பார்க்க, 1 தீமோ. 2:4; 2 பேதுரு 3:9]. ஆனால் ஒவ்வொரு நபரும் தனக்குத்தானே தீர்மானம் செய்துகொள்ள வேண்டும்.

## வேதாகமரீதியான முன்குறித்தல்

ஆனால் உலகத்தின் அஸ்திபாரத்துக்கு முன்பே தேவன் நம்மைத் தெரிந்துகொண்டு முன்குறித்திருக்கிறார் என்று சொல்லும் வேத வசனங்களைக் குறித்து என்ன?

சிலர் துரதிருஷ்டவசமாக, தேவன் தனிப்பட்டவர்கள் செய்திருக்கும் எதன்மீதும் தமது தீர்மானத்தை வைக்காமல், இரட்சிக்கப்படுவதற்காகச் சிலரையும், எஞ்சியவர்களை அழிவுக்குமாகத் தெரிந்து கொண்டிருக்கிறார் என்று நினைக்கிறார்கள். அதாவது, யார்





இரட்சிக்கப்பட வேண்டும், யார் அழிவுக்குள்ளாக வேண்டும் என்பதை அவர் தெரிந்துகொண்டிருக்கிறார் என்று அவர்கள் நினைக்கிறார்கள். இந்தக் கருத்தில் சுயாதீன சித்தத்துக்கு இடமில்லை. வேதாகமத்தில் நிச்சயமாக இந்தக் கருத்து போதிக்கப்படவில்லை. முன்குறித்தலைப் பற்றி வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதை நாம் பார்ப்போம்.

தேவன் நம்மைத் தெரிந்துகொண்டிருக்கிறார் என்று வேதாகமம் போதிப்பது உண்மைதான். தம்மால் இழுக்கப்படுவதின் மூலமாக, ஆனால் *தங்கள் சொந்த தெரிந்துகொள்ளுதலின் மூலமாக* மனநதிரும்பி சுவிசேஷத்தை விசுவாசிப்பவர்களைத் தேவன் முன்னறிந்தவர்களை மீட்டுக்கொள்ளும்படி தேவன் உலகத்தோற்றத்துக்கு முன்பே தெரிந்து கொண்டிருக்கிறார். தேவன் தெரிந்துகொள்ளும் மக்களைக் குறித்துப் பவுல் என்ன சொல்லுகிறார் என்பதை வாசிப்போம்:

> தேவன் தாம் முன்னறிந்துகொண்ட தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிடவில்லை. எலியாவைக் குறித்துச் சொல்லிய இடத்தில், வேதம் சொல்லுகிறதை அறியீர்களா? அவன் தேவனை நோக்கி: கர்த்தாவே, உம்முடைய தீர்க்கதரிசிகளை அவர்கள் கொலை செய்து, உம்முடைய பலிபீடங்களை இடித்துப் போட்டார்கள்; நான் ஒருவன் மாத்திரம் மீதியாயிருக்கிறேன், என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்களே என்று இஸ்ரவேலருக்கு விரோதமாய் விண்ணப்பம் பண்ணினபோது, அவனுக்கு உண்டான தேவஉத்தரவு என்ன? பாகாலுக்கு முன்பாக முழங்காற்படியிடாத ஏழாயிரம் பேரை எனக்காக மீதியாக வைத்தேன் என்பதே. *அப்படிப்போல இக்காலத்திலேயும் கிருபையினாலே உண்டாகும் தெரிந்துகொள்ளுதலின்படி ஒரு பங்கு மீதியாயிருக்கிறது* [ரோமர் 11:2–5 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

தேவன் எலியாவிடம் ‘‘ஏழாயிரம் பேரை எனக்காக மீதியாக வைத்தேன்’’ என்று சொல்லியிருக்கிறார். ஆனால் இந்த ஏழாயிரம் பேரும் *முதலில்* பாகாலுக்கு முன்னால் முழங்காற்படியிடாமல் இருப்பதைத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். *இதைப்போலவே தேவனுடைய தெரிந்துகொள்ளுதலின்படி* யூதர்களில் விசுவாசிப்பவர்களின் மீதியான ஒரு பங்கு இருக்கிறது என்று பவுல் சொல்லுகிறார். எனவே, ஆமாம், தேவன் என்னைத் தெரிந்துகொண்டார் என்று நாம் சொல்லலாம். ஆனால் முதலில் தாங்கள் சரியானதைத் தெரிந்து கொண்டவர்களையே தேவன் தெரிந்துகொண்டிருக்கிறார். இயேசுவை விசுவாசிக்கும் எல்லோரையும் தேவன் தெரிந்துகொண்டிருக்கிறார். இதுவே சிருஷ்டிப்புக்கு முன்னிருந்து அவருடைய திட்டமாக இருந்தது.

## தேவனுடைய முன்னறிவு

இதேபோன்று, யார் சரியானதைத் தெரிந்துகொள்ளுவார்கள் என்பதைத் தேவன் முன்னறிந்திருந்தார் என்றும் வேதாகமம் போதிக்கிறது. எடுத்துக்காட்டாக, பேதுரு இவ்வாறு எழுதியிருக்கிறார்:

> *பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே,* ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்ப்படிலுக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தந் தெளிக்கப்படுதலுக்கும் *தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு* எழுதுகிறதாவது... [1 பேதுரு 1:2 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

தேவனுடைய முன்னறிவின்படி நாம் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறோம். பவுலும் முன்னறியப்பட்ட விசுவாசிகளைப் பற்றி எழுதியிருக்கிறார்:

> தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்; எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார் [ரோமர் 8:29–30].

இயேசுவை விசுவாசிக்கும்படி தெரிந்துகொள்ளும் நம்மைத் தேவன் முன்னறிந்திருந்தார். நாம் அவருடைய சாயலுக்கு ஒப்பாக இருக்கும்படி அவர் நம்மை முன்குறித்திருக்கிறார். அவருடைய பெரிய குடும்பத்தில் நாம் மறுபடியும் பிறந்த பிள்ளைகளாவோம். இந்த நித்திய திட்டத்துக்கு ஏற்றபடி அவர் நம்மைச் சுவிசேஷத்தின்மூலமாக அழைத்திருக்கிறார். நம்மை நீதிமானாக்கியிருக்கிறார், தமது வருங்கால ராஜ்யத்தில் நம்மை மகிமைப்படுத்துவார்.

மற்றொரு நிருபத்தில் பவுல் இவ்வாறு எழுதியிருக்கிறார்:

> நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார். *தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு அவர் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே,* பிரியமானவருக்குள் தாம்





> *நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்துமூலமாய்த் தமக்குச் சுவிகார புத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்* [எபே. 1:3–6 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ள].

அதே சத்தியம் இங்கேயும் கொடுக்கப்பட்டுள்ளது – உலகத் தோற்றத்தின் அஸ்திபாரத்துக்கு முன்பாகவே, மனந்திரும்பி விசுவாசிப்பார்கள் என்று தாம் முன்னறிந்தவர்களை இயேசுகிறிஸ்துவின் மூலமாகத் தமது பரிசுத்த குமாரர்களாகும்படி தேவன் முன்குறித்திருக்கிறார்.

நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, சிலர் இப்படிப்பட்ட வேதவசனங்களின் அர்த்தத்தைத் திரித்து, மற்ற வேதவசனங்களை முற்றிலுமாகப் புறக்கணித்து, நமது இரட்சிப்பை நாம் தெரிந்துகொள்ள முடியாது என்றும் தேவனே எல்லாவற்றையும் தெரிந்துகொண்டிருக்கிறார் என்றும் சொல்லுகிறார்கள். இந்தக் கோட்பாட்டை அவர்கள் ‘‘நிபந்தனையில்லாத தெரிந்துகொள்ளப்படுதல்’’ என்று அழைக்கிறார்கள். அதாவது சில நிபந்தனைகளின் அடிப்படையில் செய்யப்படாத தெரிந்துகொள்ளப்படுதல் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். சுயாதீனமான நாடுகளில் தேர்தலில் நிற்பவர்களை அவர்கள் நமது மனதில் சில நிபந்தனைகளை நிறைவேற்றுவதின் அடிப்படையில் நாம் தெரிந்தெடுக்கிறோம். நிபந்தனைகளை நிறைவேற்றுவதின் அடிப்படையில் மனைவியையோ அல்லது கணவனையோ தெரிந்தெடுக்கிறோம். விரும்பப்படத்தக்க பண்புகளை அவர்கள் பெற்றிருக்கிறார்களா என்று நாம் பார்க்கிறோம். என்றாலும், சில இறையியலாளர்கள் யார் இரட்சிக்கப்படுவார்கள், யார் இரட்சிக்கப்படமாட்டார்கள் என்பது குறித்த தேவனுடைய தெரிந்துகொள்ளுதலானது ‘‘நிபந்தனையில்லாத தெரிந்துகொள்ளுதல்’’ என்று நம்மை நம்ப வைக்க முயலுகிறார்கள். அதாவது மக்கள் நிறைவேற்றிய எந்த நிபந்தனையையும் அது அடிப்படையாகக் கொள்ளவில்லை என்று சொல்லுகிறார்கள். இப்படியாகத் தனிப்பட்டவர்களின் இரட்சிப்பு என்பது கொடூரமான, அநீதியான, மாய்மாலமான, அறிவில்லாத தேவனின் விருப்புவெறுப்புக்கு ஏற்றபடி தற்செயலாக நிகழக்கூடியதாக இருக்கிறது! ‘‘நிபந்தனையில்லாத தெரிந்துகொள்ளுதல்’’ என்ற சொற்றொடர் தன்னில்தானே முரண்பாடானதாக இருக்கிறது. *தெரிந்துகொள்ளுதல்* என்பதே நிபந்தனைக்குட்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. அது ‘‘நிபந்தனையில்லாத தெரிந்துகொள்ளுதல்’’ என்றால் அது தெரிந்துகொள்ளுதலே அல்ல, தற்செயலாக நிகழ்வதாகும்.

### பரந்த சித்திரம்

இப்போது நாம் பரந்த சித்திரத்தைக் காண்கிறோம். நாம் எல்லோரும் பாவம் செய்வோம் என்பதைத் தேவன் அறிந்திருந்தார். நம்மில் எவரும் பிறப்பதற்கு முன்பே நம்மை மீட்பதற்கான திட்டத்தை அவர் உருவாக்கினார். இந்தத் திட்டத்தின்படி அவருடைய பாவமில்லாத குமாரன் நமக்குப் பதிலாக, நமது பாவங்களுக்காக மரிக்க வேண்டியிருப்பதால் அவருடைய திட்டம் அவருடைய அற்புதமான அன்பையும், நீதியையும் வெளிப்படுத்துகிறது. மனந்திரும்பி, விசுவாசிப்பவர்கள் மன்னிக்கப்படுவதை மட்டுமல்ல, தமது குமாரனாகிய இயேசுவின் சாயலைப் பெறும்படியாகவும் அவர் முன்குறித்திருக்கிறார். ‘‘இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்’’ என்று பவுல் சொல்லியிருக்கிறார் [கலா. 2:20].

மறுபடியும் பிறந்து, தேவனுடைய பிள்ளைகளாக இருக்கும் நமக்கு, ஒருநாள் அழிவில்லாத சரீரம் கொடுக்கப்படும். ஒரு பரிபூரணமான சமுதாயத்தில், நாம் நமது அற்புதமான பரமபிதாவைச் சேவித்து, அவரில் அன்புகூர்ந்து, அவரோடு ஐக்கியத்தில் வாழுவோம். புதிய பூமியிலும் புதிய எருசலேமிலும் நாம் வாழ்வோம். இயேசுவின் பலி மரணத்தின் மூலமாக இவையெல்லாமே சாத்தியமாகியிருக்கிறது! தேவனுடைய முன்குறிக்கப் பட்ட திட்டத்துக்காக அவரைத் துதிப்போமாக!

### இந்தத் தற்போதைய வாழ்க்கை

தேவனுடைய நித்திய திட்டத்தை நாம் புரிந்துகொள்ளும்போது, தற்போதைய வாழ்க்கையைக்குறித்து முழுவதுமாகப் புரிந்துகொள்ள முடியும். அடிப்படையில் இந்த வாழ்க்கை ஒவ்வொரு நபருக்கும் ஒரு தேர்வாக இருக்கிறது. ஒவவொரு நபருடைய தெரிந்துகொள்ளுதலுமே அவர் தேவனோடு நித்திய காலமாக வாழும் அவருடைய சொந்தக் குமாரனாக இருக்கும் சிலாக்கியத்தின் ஆசீர்வாதத்தைத் தீர்மானிக்கும்படி செய்கிறது. தங்களைத் தாங்களே தாழ்த்தி, தேவனால் இழுக்கப்படுவதற்கு இடம் கொடுத்து, மனந்திரும்பி, விசுவாசிப்பவர்கள் உயர்த்தப்படுவார்கள் [பார்க்க, லூக்கா 18:14]. *அந்த வருங்கால வாழ்க்கைக்கு இன்றைய வாழ்க்கை ஒரு தேர்வாக இருக்கிறது.*

இது இந்தத் தற்போதைய வாழ்க்கையின் சில புதிர்களைப் புரிந்து கொள்ளவும் நமக்கு உதவுகிறது. ‘‘ஏன் சாத்தானும் அவனுடைய பிசாசு களும் மக்களைச் சோதிக்க அனுமதிக்கப்படுகின்றன?’’ என்று சிலர் கேட்கலாம். ‘‘சாத்தான் பரலோகத்தைவிட்டுத் தள்ளப்பட்டபோது, அவன் ஏன் உலகத்துக்குள் வரும்படி அனுமதிக்கப்பட்டான்?’’ என்று சிலர் கேட்கலாம்.

இப்போது நாம் சாத்தானும்கூடத் தேவனுடைய திட்டத்தின் தெய்வீக நோக்கம் செயல்பட ஏதுவாக இருக்கிறான் என்பதை அறிந்துகொள்ளு





கிறான். மனிதர்கள் தெரிந்துகொள்ளுவதற்கு ஒரு மாற்றாகச் சாத்தான் இருக்கிறான். இயேசுவைச் சேவிப்பதை மட்டுமே தெரிந்துகொள்ள முடியும் என்றிருந்தால், எல்லோரும் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இயேசுவைச் சேவிப்பார்கள்.

இது எல்லோரும் ஒரே வேட்பாளர் நிற்கும் தேர்தலில் வாக்களிப்பது போல இருக்கும். அந்த வேட்பாளர் போட்டியில்லாமல் தேர்ந்தெடுக்கப் படுவார். ஆனால் அவர் ஒருபோதும் தான் தனது வாக்காளர்களின் அன்பையோ அல்லது நம்பிக்கையையோ பெற்றிருக்கிறோம் என்ற நம்பிக்கையைப் பெற முடியாது. அவருக்கு வாக்களிப்பதைத் தவிர அவர்களால் வேறு எதையும் தெரிந்துகொள்ள முடியாது. மக்களின் இருதயத்துக்காகப் போட்டியிட வேறு எவரும் இல்லாதிருப்பார்களானால் தேவனும் இதே நிலைமையில்தான் இருப்பார்.

இந்தக் கோணத்திலிருந்து அதைப் பாருங்கள்: தேவன் ஆதாமையும் ஏவாளையும் மறுக்கப்பட்ட காரியம் எதுவுமே இல்லாத ஒரு தோட்டத்தில் வைத்திருப்பாரானால் அது எப்படி இருக்கும்? அப்படியிருக்குமானால் ஆதாமும் ஏவாளும் தங்கள் சூழ்நிலையின் காரணமாக வெறும் இயந்திர மனிதர்களாகவே இருப்பார்கள். தேவனுக்குக் கீழ்ப்படியாமலிருக்க அவர்களுக்கு வாய்ப்பே இல்லாதபடியால் ‘‘நாங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிவதைத் தெரிந்துகொண்டிருக்கிறோம்’’ என்று அவர்களால் சொல்ல முடியாது.

எல்லாவற்றையும்விட முக்கியமாக ‘‘ஆதாமும் ஏவாளும் என்னிடத்தில் அன்புகூருகிறார்கள் என்பதை நான் அறிவேன்’’ என்று தேவனால் சொல்ல முடியாது. ஏனென்றால் ஆதாமும் ஏவாளும் தேவனுக்குக் கீழ்ப்படிந்து தேவன்மீதான தங்கள் அன்பை நிரூபிப்பதற்கு வாய்ப்பே இல்லாமலிருக்கும். *அவர்கள் தமக்குக் கீழ்ப்படிய விரும்புகிறார் களா என்பதைக் கண்டறிவதற்காகத் தேவன் நல்லொழுக்கரீதியாகச் சுயாதீன சித்தத்தைக் கொண்ட மக்களுக்குக் கீழ்ப்படியாமைக்கான வாய்ப்பைக் கொடுக்க வேண்டியிருக்கும்.* தேவன் எவரையும் சோதிப்ப தில்லை [பார்க்க, யாக். 1:13]. ஆனால் அவர் எல்லோரையும் பரீட்சிக்கிறார் [பார்க்க, சங். 11:5; நீதி. 17:3]. சாத்தானால் அவர்கள் சோதிக்கப்படும்படி அனுமதிப்பது அவர்களைப் பரீட்சிப்பதற்கான ஒரு வழியாகும். இவ்வாறு சாத்தான் தேவனுடைய நித்திய திட்டத்தில் தெய்வீக நோக்கத்தை நிறைவேற்றுகிறான்.

### ஒரு பரிபூரணமான முன்மாதிரி

உபாகமம் 13:1–3 வசனங்களில் நாம் இப்படி வாசிக்கிறோம்:

> உங்களுக்குள்ளே ஒரு தீர்க்கதரிசியாகிலும், சொப்பனக்காரனாகிலும் எழும்பி: நீங்கள் அறியாத வேறே தேவர்களைப் பின்பற்றி, அவர்களைச்

சேவிப்போம் வாருங்கள் என்று சொல்லி, உங்களுக்கு ஒரு அடையாளத்தையும் அற்புதத்தையும் காண்பிப் பேன் என்று குறிப்பாய்ச் சொன்னாலும், அவன் சொன்ன அடையாளமும் அற்புதமும் நடந்தாலும், அந்தத் தீர்க்கதரிசியாகிலும், அந்தச் சொப்பனக்காரனா கிலும் சொல்லுகிறவைகளைக் கேளாதிருப்பீர்களாக; *உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்புகூருகிறீர்களோ இல்லையோ என்று அறியும் படிக்கு உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச்* சோதிக்கிறார் [அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

கள்ளத் தீர்க்கதரிசிக்கு அற்புதங்களையோ அல்லது அடையாளங்களையோ செய்யும் இயல்புக்கு அப்பாற்பட்ட திறனைக் கொடுத்தது தேவன் அல்ல, சாத்தானே என்று நாம் முடிவுக்குவர முடியும். என்றாலும் தேவன் அதை அனுமதித்தார். தமது மக்களின் இருதயத்தில் என்ன இருக்கிறது என்பதை அறிய சாத்தானின் சோதனையைத் தமது சொந்தப் பரீட்சித்தலாகப் பயன்படுத்தினார்.

இதே கருத்து நியாயாதிபதிகள் 2:21–3:8 வசனங்களிலும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இஸ்ரவேல் ஜனங்கள் தமக்குக் கீழ்ப்படிகிறார்களா என்பதை அறிய தேவன் சுற்றியிருக்கும் தேசத்தாரால் அவர்கள் சோதிக்கப்படும்படி இடம் கொடுத்தார். இயேசுவானவரும்கூடப் பிசாசினால் சோதிக்கப்படும்படி ஆவியானவரால் வனாந்தரத்துக்கு வழிநடத்தப்பட்டார் [பார்க்க, மத். 4:1]. இப்படியாகத் தேவன் அவரைப் பரீட்சித்தார். அவர் பாவமில்லாதவர் என்பதை நிரூபிக்க வேண்டியிருந் தது. சோதனையினால் பரீட்சிக்கப்படுவதே பாவமில்லை என்பதை நிரூபிப்பதற்கான ஒரே வழியாகும்.

### எல்லாவற்றுக்கும் சாத்தானைக் குற்றம்சாட்டக் கூடாது

சுவிசேஷத்தின் சத்தியத்தைக் காண முடியாமல் மக்களின் மனக் கண்களைக் குருடாக்கியதின்மூலம் சாத்தான் ஏற்கெனவே உலகத்தில் அதிகமான மக்களை ஏமாற்றிருக்கிறான். என்றாலும் சாத்தானால் எல்லோருடைய கண்களையும் குருடாக்க முடியாது என்பதை நினைவில் வைத்திருங்கள். தாங்கள் ஏமாற்றப்படும்படி அனுமதிக்கிற வர்களையே, சத்தியத்தைப் புறக்கணிக்கிறவர்களையே அவன் ஏமாற்று கிறான்.

அவிசுவாசிகள் தங்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு அறியாமையில் இருக்கிறார்கள் என்று பவுல் அறிவித்திருக்கிறார் [எபே. 4:18]. ஆனால் அவர்களுடைய அறிவு அந்தகாரப்பட்டிருப்பதிற்கும், அறியாமைக்கும் அடிப்படையான காரணத்தையும் அவர் வெளிப்படுத்தியிருக்கிறார்:





புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறது போல நீங்கள் இனி நடவாமலிருங்கள். அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு, *தங்கள் இருதய கடினத்தினால்* தங்களில் இருக்கும் அறியாமை யினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து; *உணர்வில்லாதவர்களாய்*, சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கும்படி, தங்களைக் காமவிகாரத் திற்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள் [எபே. 4:17ஆ –19 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

அவிசுவாசிகள் சாத்தானால் ஏமாற்றப்பட்ட துரதிருஷ்டமான மக்களாக மட்டும் இருக்கவில்லை. அவர்கள் வேண்டுமென்றே அறியாமையில் இருந்து, பாவம் செய்கிறவர்களாகவும், தங்கள் இருதயக் கடினத்தின் காரணமாக ஏமாற்றப்பட்டவர்களாகவே இருக்க விரும்புகிறவர்களாகவும் இருக்கிறார்கள்.

உங்களுடைய சொந்த வாழ்க்கை நிரூபிப்பதுபோல எவரும் ஏமாற்றப்பட்டவர்களாகவே இருக்க வேண்டிய அவசியமில்லை. தேவனை நோக்கி உங்கள் இருதயத்தைத் திருப்புவீர்களானால், சாத்தானால் உங்களை ஏமாற்ற முடியாது.

இறுதியாக, கிறிஸ்துவின் ஆயிரமாண்டு ஆளுகையின்போது சாத்தான் கட்டப்படுவான். அப்போது அவனால் எவரிலும் தாக்கம் விளைவிக்க முடியாது.

பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் [தூதன்] பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரை போட்டான். அதற்குப்பின்பு அது கொஞ்சக்காலம் விடுதலையாக வேண்டும் [வெளி. 20:2–3].

சாத்தான் கட்டப்படுவதற்கு முன்பாக அவன் ''ஜனங்களை மோசம்போக்கினான்'' என்பதைக் கவனியுங்கள். ஆனால் அவன் கட்டப்படும்போது அவர்களை மோசம்போக்க முடியாது. என்றாலும், விடுவிக்கப்படும்போது அவன் மறுபடியுமாக ஜனங்களை மோசம் போக்குவான்:

அந்த ஆயிரம் வருஷம் முடியும்போது சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாகி, பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகளாகிய கோகையும் மாகோகையும் *மோசம்போக்கும்படிக்கும்*, அவர்களை

> யுத்தத்திற்குக் கூட்டிக்கொள்ளும்படிக்கும் புறப்படுவான்; அவர்களுடைய தொகை கடற்கரை மணலத்தனையாயிருக்கும். அவர்கள் பூமியெங்கும் பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்துகொண்டார்கள்; அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப் போட்டது.

தேவன் ஏன் ஒரு குறுகிய காலகட்டத்துக்குச் சாத்தானை விடுவிக்க வேண்டும்? கிறிஸ்துவின் ஆளுகையின்போது இருயத்தில் அவர்மீது வெறுப்புக் கொண்டிருந்தாலும், கீழ்ப்படிவதுபோல நடித்துக்கொண்டிருந்தவர்களை வெளிப்படுத்துவதற்காகவே தேவன் இதைச் செய்கிறார். அப்போது அவர்களை நீதியாக நியாயந்தீர்க்க முடியும். இதுவே இறுதியான பரீட்சையாகும்.

இதே காரணத்துக்காகவே இப்போது சாத்தான் உலகத்தில் செயல்படும்படி அனுமதிக்கப்பட்டிருக்கிறான். தங்கள் இருதயத்தில் கிறிஸ்துவை வெறுப்பவர்கள் வெளிப்படுத்தப்பட்டு இறுதியில் நியாயந்தீர்க்கப்படுகிறார்கள். தமது தெய்வீக நோக்கங்களை நிறைவேற்றச் சாத்தான் தேவைப்படாமல் இருக்கும்போது, வஞ்சிக்கிறவன் நிரந்தரமாக உபாதிக்கப்படும்படி அக்கினிக்கடலில் தள்ளப்படுவான் [பார்க்க, வெளி. 20:10].

## வருங்கால உலகத்துக்காக ஆயத்தமாகுதல்

நீங்கள் மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசித்திருப்பீர்களானால், இந்த வாழ்க்கையின் முதலாவதும் மிக முக்கியமானதுமான பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருக்கிறீர்கள். நீங்கள் தொடர்ந்து தேவனுக்குப் பயபக்தியுள்ளவர்களாகவும், உண்மையுள்ளவர்களாகவும் இருக்கிறீர்களா என்று பரீட்சிக்கப்படுவீர்கள். ''விசுவாசத்தில் நிலைத்திருக்கிறவர்கள்'' மட்டுமே ''பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும்'' தேவனுக்கு முன்பாக நிறுத்தப்படுவீர்கள் [கொலோ. 1:21–22].

இதற்குப் பிறகு நாம் எல்லோருமே ஒருநாள் தேவனுடைய நியாயாசனத்துக்கு முன்பாக நிற்போம். அப்போது பூமியில் நமது கீழ்ப்படிதலுக்கு ஏற்றபடி தனித்தனியாகப் பரிசு பெறுவோம். எனவே தேவனுடைய ராஜ்யத்தில் வருங்காலச் சிறப்புப் பரிசுகளைப் பெறத் தகுதியானவர்கள்தானா என்று நாம் இப்போதும் பரீட்சிக்கப்படுகிறோம். பவுல் இப்படி எழுதியிருக்கிறார்:

> இப்படியிருக்க, நீ உன் சகோதரனைக் குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிறதென்ன? *நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே.* அந்தப்படி: முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும் தேவனை அறிக்கை பண்ணும் என்று என் ஜீவனைக்கொண்டு உரைக்கிறேன் என்பதாய்க் கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது. ஆதலால் *நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்* [ரோமர் 14:10–12 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].





> ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும் படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும் [2 கொரி. 5:10].

> ஆனதால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச் சொல்லாதிருங்கள்; இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, *இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்; அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும்* [1 கொரி. 4:5 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

## என்ன பரிசு கொடுக்கப்படும்?

இயேசுவுக்குத் தங்கள் அன்பையும் பயபக்தியையும் நிரூபிக்கிறவர்களுக்கு எந்தப் பரிசுகள் கொடுக்கப்படும்?

வேதவசனத்தில் குறைந்தபட்சம் இரண்டு வெவ்வேறான பரிசுகளைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது – தேவனிடமிருந்து பாராட்டு மற்றும் இன்னுமதிகமாக அவரைச் சேவிப்பதற்கான வாய்ப்பு. பிரபுவைக் குறித்த இயேசுவின் உவமைக்கதையில் இரண்டுமே வெளிப்படுத்தப்பட்டுள்ளது:

> பிரபுவாகிய ஒருவன் ஒரு ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பிவரும்படி தூரதேசத்துக்குப் போகப் புறப்பட்டான். புறப்படும்போது, அவன் தன் ஊழியக்காரரில் பத்துப்பேரை அழைத்து, அவர்களிடத்தில் பத்து ராத்தல் திரவியங்கொடுத்து: நான் திரும்பிவருமளவும் இதைக்கொண்டு வியாபாரம் பண்ணுங்கள் என்று சொன்னான். அவனுடைய ஊரார் அவனைப் பகைத்து, இவன் எங்கள்மேல் ராஜாவாயிருக்கிறது எங்களுக்கு மனதில்லையென்று சொல்லும்படி, அவன் பின்னே ஸ்தானாபதிகளை அனுப்பினார்கள். அவன் ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பிவந்தபோது, தன்னிடத்தில் திரவியம் வாங்கியிருந்த அந்த ஊழியக்காரரில்

> அவனவன் வியாபாரம்பண்ணிச் சம்பாதித்தது இவ்வளவென்று அறியும்படி, அவர்களைத் தன்னிடத்தில் அழைத்துவரச் சொன்னான். அப்பொழுது முந்தினவன் வந்து: ஆண்டவனே, உம்முடைய ராத்தலினால் பத்துராத்தல் ஆதாயம் கிடைத்தது என்றான். எஜமான் அவனை நோக்கி: நல்லது உத்தம ஊழியக்காரனே, நீ கொஞ்சத்தில் உண்மையுள்ளவனாயிருந்தபடியால் பத்துப் பட்டணங்களுக்கு அதிகாரியாயிரு என்றான். அப்படியே இரண்டாம் ஊழியக்காரன் வந்து: ஆண்டவனே, உம்முடைய ராத்தலினால் ஐந்து ராத்தல் ஆதாயம் கிடைத்தது என்றான். அவனையும் அவன் நோக்கி: நீயும் ஐந்து பட்டணங்களுக்கு அதிகாரியாயிரு என்றான். பின்பு வேறொருவன் வந்து: ஆண்டவனே, இதோ, உம்முடைய ராத்தல், இதை ஒரு சீலையிலே வைத்திருந்தேன். நீர் வைக்காததை எடுக்கிறவரும், விதைக்காததை அறுக்கிறவருமான கடினமுள்ள மனுஷனென்று அறிந்து, உமக்குப் பயந்திருந்தேன் என்றான். அதற்கு அவன்: பொல்லாத ஊழியக்காரனே, உன் வாய்ச்சொல்லைக் கொண்டே உன்னை நியாயந்தீர்க்கிறேன். நான் வைக்காததை எடுக்கிறவனும், விதைக்காததை அறுக்கிறவனுமான கடினமுள்ள மனுஷனென்று அறிந்தாயே. பின்னை ஏன் நீ என் திரவியத்தைக் காசுக்கடையிலே வைக்கவில்லை; வைத்திருந்தால் நான் வரும் போது, அதை வட்டியோடே வரப்பற்றிக் கொள்வேனே என்று சொல்லி, சமீபமாய் நிற்கிறவர்களை நோக்கி: அந்த ராத்தலை அவன் கையிலிருந்தெடுத்து, பத்து ராத்தல் உள்ளவனுக்குக் கொடுங்கள் என்றான். அதற்கு அவர்கள்: ஆண்டவனே, அவனுக்குப் பத்து ராத்தல் இருக்கிறதே என்றார்கள். அதற்கு அவன்: உள்ளவன் எவனுக்குங் கொடுக்கப்படும், இல்லாதவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். அன்றியும் தங்கள்மேல் நான் ராஜாவாகிறதற்கு மனதில்லாதவர்களாகிய என்னுடைய சத்துருக்களை இங்கே கொண்டுவந்து, எனக்கு முன்பாக வெட்டிப் போடுங்கள் என்று சொன்னான் என்றார் [லூக்கா 19:12–27].

இப்போது இல்லாதிருந்து, பிறகு திரும்பி வந்துசேர்ந்த பிரபு இயேசுவைக் குறிக்கிறான். இயேசுவானவர் திரும்பி வரும்போது, அவர் நமக்குக் கொடுத்த வரங்கள், திறமைகள், ஊழியங்கள், வாய்ப்புகள் இவைகளைக்கொண்டு நாம் என்ன செய்தோம் என்று கணக்குக் கொடுக்க வேண்டும். உவமைக்கதையில் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்ட திரவியம் இதைக் குறிக்கிறது. நாம் உண்மையுள்ளவர்களாக இருப்போமானால், அவருடைய பாராட்டைப் பெறுவதோடு மட்டுமின்றி, அவர் பூமியை ஆளுகைசெய்யும்போது அவருக்கு உதவிசெய்யும் அதிகாரமும் நமக்குக் கொடுக்கப்படும் [பார்க்க, 2 தீமோ. 2:12; வெளி. 2:26–27; 5:10; 20:6]. இந்த உவமைக்கதையில் மேற்பார்வை பார்க்கும்படி கொடுக்கப்படும் பட்டணங்கள் இதைக் குறிக்கின்றன.





## நமது வருங்கால நியாயத்தீர்ப்பிலுள்ள நியாயம்

நமது வருங்கால நியாயத்தீர்ப்பு எப்படிப் பரிபூரணமாக நியாயமானது என்பதை இயேசுவானவரின் மற்றொரு உவமைக் கதை காட்டுகிறது:

> பரலோகராஜ்யம் வீட்டெஜமானாகிய ஒரு மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது; அவன் தன் திராட்சத் தோட்டத்துக்கு வேலையாட்களை அமர்த்த அதிகாலையிலே புறப்பட்டான். வேலையாட்களுடன் நாளொன்றுக்கு ஒரு பணம் கூலி பேசி, அவர்களைத் தன் திராட்சத் தோட்டத்துக்கு அனுப்பினான். மூன்றாம் மணி வேளையிலும் அவன் புறப்பட்டுப் போய், கடைத் தெருவிலே சும்மா நிற்கிற வேறு சிலரைக் கண்டு: நீங்களும் திராட்சத்தோட்டத்துக்குப் போங்கள், நியாயமானபடி உங்களுக்குக் கூலி கொடுப்பேன் என்றான்; அவர்களும் போனார்கள். மறுபடியும், ஆறாம் ஒன்பதாம் மணி வேளையிலும் அவன் போய் அப்படியே செய்தான். பதினோராம் மணி வேளையிலும் அவன் போய், சும்மா நிற்கிற வேறு சிலரைக் கண்டு: நீங்கள் பகல் முழுவதும் இங்கே சும்மா நிற்கிறதென்ன என்று கேட்டான். அதற்கு அவர்கள்: ஒருவரும் எங்களுக்கு வேலையிடவில்லை என்றார்கள். அவன் அவர்களை நோக்கி: நீங்களும் திராட்சத்தோட்டத்துக்குப் போங்கள், நியாயமானபடி கூலி பெற்றுக்கொள்வீர்கள் என்றான். சாயங்காலத்தில், திராட்சத் தோட்டத்துக்கு எஜமான் தன் காரியகாரனை நோக்கி: நீ வேலையாட்களை அழைத்து, பிந்திவந்தவர்கள் தொடங்கி முந்திவந்த வர்கள் வரைக்கும் அவர்களுக்குக் கூலிகொடு என்றான். அப்பொழுது பதினோராம் மணி வேளையில் அமர்த்தப்பட்டவர்கள் வந்து ஆளுக்கு ஒவ்வொரு பணம் வாங்கினார்கள். முந்தி அமர்த்தப்

பட்டவர்கள் வந்து, தங்களுக்கு அதிக கூலி கிடைக்கும் என்று எண்ணினார்கள், அவர்களும் ஆளுக்கு ஒவ்வொரு பணம் வாங்கினார்கள். வாங்கிக்கொண்டு, வீட்டெஜமானை நோக்கி: பிந்திவந்தவர்களாகிய இவர்கள் ஒரு மணி நேர மாத்திரம் வேலைசெய்தார்கள்; பகலின் கஷ்டத்தையும் வெயிலின் உஷ்ணத்தையும் சகித்த எங்களுக்கு இவர்களைச் சமமாக்கினீரே என்று முறுமுறுத்தார்கள். அவர்களில் ஒருவனுக்கு அவன் பிரதியுத்தரமாக: சிநேகிதனே, நான் உனக்கு அநியாயஞ் செய்யவில்லை; நீ என்னிடத்தில் ஒரு பணத்துக்குச் சம்மதிக்கவில்லையா? உன்னுடையதை நீ வாங்கிக் கொண்டு போ, உனக்குக் கொடுத்ததுபோலப் பிந்தி வந்தவனாகிய இவனுக்கும் கொடுப்பது என்னுடைய இஷ்டம். என்னுடையதை என் இஷ்டப்படி செய்ய எனக்கு அதிகாரமில்லையா? நான் தயாளனாயிருக்கிற படியால், நீ வன் கண்ணனாயிருக்கலாமா என்றான். இவ்விதமாக, பிந்தினோர் முந்தினோராயும், முந்தினோர் பிந்தினோராயும் இருப்பார்கள்; அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றார் (மத். 20:1–16).

இறுதியில் தேவனுடைய ஊழியக்காரர்கள் எல்லோருமே ஒரே பரிசைப் பெறுவார்கள் என்று இயேசுவானவர் இந்த உவமைக்கதையில் போதிக்கவில்லை. அது நியாயமகாகவும் இருக்காது, மேலும் பல வேத வசனங்களுக்கு அது முரண்பாடாகவும் இருக்கும் (எடுத்துக்காட்டாக, பார்க்க, லூக்கா 19:12–27; 1 கொரி. 3:8).

மாறாக, தேவனுடைய ஊழியக்காரர்கள் ஒவ்வொருவரும் அவர்கள் அவருக்காக என்ன செய்தார்கள் என்பதின் அடிப்படையில் மட்டுமல்ல, அவர் அவர்களுக்கு எவ்வளவாக வாய்ப்புக்கொடுத்தார் என்பதின் அடிப்படையிலும் பரிசு பெறுவார்கள் என்று இயேசுவானவர் போதிக்கிறார். கிறிஸ்துவின் உவமைக்கதையில் ஒரு மணி நேரம் மட்டும் வேலை செய்தவர்களுக்கு எஜமான் அதிக வாய்ப்புக் கொடுத்திருந்தால் அவர்கள் முழு நேரமும் ஊழியம் செய்திருப்பார்கள். எனவே நாள் முழுவதும் ஊழியம்செய்யும் வாய்ப்பைப் பெற்றவர் களோடுகூட தங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு மணி நேர வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டவர்களுக்கும் சமமாகப் பரிசு கொடுக்கப்படுகிறது.

தேவன் தமது ஊழியக்காரர்கள் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறான வாய்ப்புக்களைக் கொடுக்கிறார். சிலருக்கு அற்புதமான வரங்களைக் கொடுத்து, அவர்கள் தமக்கு ஊழியம்செய்யவும், ஆயிரக்





கணக்கான மக்களுக்கு ஆசீர்வாதமாக விளங்கவும் அதிகமான வாய்ப்புக்களைக் கொடுக்கிறார். மற்றவர்களுக்குக் குறைவான வாய்ப்பு களையும், வரங்களையும் கொடுக்கிறார். என்றாலும் தேவன் தங்களுக் குக் கொடுத்திருப்பதில் அவர்கள் மற்றவர்களைப் போலவே உண்மை யுள்ளவர்களாக இருப்பார்களானால் அவர்களுக்கும் அதே பரிசு கொடுக்கப்படும். [68]

## முடிவுரை

தேவனுக்குக் கீழ்ப்படிவதைவிட முக்கியமானது எதுவும் கிடையாது, ஒருநாள் எல்லா மக்களும் அதை அறிந்துகொள்ளுவார்கள். ஞானமுள்ள மக்கள் இப்போதே அதை அறிந்து, அதற்கேற்றபடி செயல் படுகிறார்கள்!

> காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே. ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டு வருவார் (பிர. 12:13–14).

சீஷர்களை உருவாக்கும் ஊழியர் தனது முழு இருதயத்தோடும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறார். தமது சீஷர்களும் அப்படியே செய்யும்படி தூண்டுவதற்காக எல்லாவற்றையும் செய்கிறார்.

நமது வருங்கால நியாயத்தீர்ப்பைக் குறித்து மேலும் ஆய்வு செய்ய: பார்க்க, மத். 6:1–6, 16–18; 10:41–42; 12:36–37; 19:28–29; 25:14–30; லூக்கா 12:2–3; 14:12–14; 16:10–13; 1 கொரி. 3:5–15; 2 தீமோ 2:12; 1 பேதுரு 1:17; வெளி. 2:26–27; 5:10; 20:6.

[68] இளம் வயதிலேயே மனந்திரும்பிப் பல ஆண்டுகளாக ஆண்டவருக்கு உண்மையாக ஊழியம்செய்கிறவர்களுக்கும், வாழ்க்கையின் கடைசி ஆண்டில் மனந்திரும்பி, ஓராண்டு மட்டும் தேவனுக்கு உண்மையாக ஊழியம்செய்கிறவர் களுக்கும் ஒரே பரிசு கொடுக்கப்படும் என்றும் இந்த உவமைக் கதை போதிக்கவில்லை. அப்படிக் கொடுத்தால் அநீதியாக இருக்கும், மேலும் இது தேவன் ஒவ்வொருவருக்கும் கொடுக்கும் வாய்ப்பின் அடிப்படையிலும் இல்லை. தேவன் ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய வாழ்க்கை முழுவதிலும் மனந்திரும்புவதற்கான வாய்ப்பைக் கொடுக்கிறார். எனவே, நீண்ட காலம் ஊழியம் செய்கிறவர்கள் குறைந்த காலம் ஊழியம் செய்கிறவர்களைவிட அதிகப் பரிசைப் பெறுவார்கள்.